நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## குழந்தைகளிடம்

# அறிவியல் சிந்தனை விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்

**தாம்பரம், டிச.27:** குழந்தைகளிடம் அறிவியல் சிந்தனை விழிப்புணர்வை உருவாக்க வேண்டுமென்று முதல்வர் மு.கருணாநிதி வலியுறுத்தினார்.

சென்னை பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில், 'நில வளத்தை வளமைக்காகப் பயன்படுத்தி வருங்கால தலைமுறைக்காகப் பாதுகாப்போம்' என்ற கருத்தில் டிசம்பர் 27 முதல் 31 வரை 18-வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டை தொடங்கி வைத்து முதல்வர் கருணாநிதி பேசியது:

தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பான 1.30 கோடி ஹெக்டேரில் 57.7 சதவிகிதம் விவசாயத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. நிலவளத்தைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மனித வாழ்விற்கு இன்றியமையாத தேவையான நீரும், நிலமும், மனிதர்களின் தவறான கையாளுதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் பாழ்படுகிறது.

நவீன விஞ்ஞானத்தின் மூலம் விவசாய உற்பத்தி பெருகினாலும், அதிகமாகப் பயன்படுத்தப்படும் ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளால் மண் வளம் பாதிக்கப்படுகின்றது. பல்வேறு காரணங்களால் தண்ணீர் கெட்டு வருகிறது.

பூமியின் வெப்பம் அதிகரிப்பதாலும், சுற்றுச்சூழல் கெடுவதாலும் விவசாயம் பாதிக்கப்படுகின்றது. நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கள்தொகை அதிகரிப்பும் இதுபோன்ற நிகழ்வுகளுக்கு ஒரு காரணம்.

நில வளத்தைப் பாதுகாக்க மத்திய மாநில அரசுகள் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என்றார்.

விழாவில் சந்திராயன் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டமைப்பின் தேசியத் தலைவர்கள் கமல்காந்த் திவேதி, ஆர்.என்.ரே, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டமைப்பின் உறுப்பினர் செயலர் எஸ்.வின்சென்ட், தமிழக அமைச்சர்கள் க.பொன்முடி, தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன், வேல்ஸ் பல்கலைக் கழக வேந்தர் ஐசரி கே.கணேஷ், துணைவேந்தர் எஸ்.ராமச்சந்திரன், தேசிய அறிவியல் கழகச் செயலர் சி.ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக வளாகத்தில் திங்கள்கிழமை தொடங்கிய 18-வது தேசிய சிறார்கள் அறிவியல் மாநாட்டில் முதல்வர் கருணாநிதிக்கு பூகோள உருண்டையை நினைவுப் பரிசாக வழங்கும் சிறார்கள். உடன் (இடமிருந்து) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கே.கணேஷ், உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன்.

## பூண்டு சாகுபடி பயிற்சி முகாம்

First Published : 27 Dec 2010 11:11:18 AM IST

கொடைக்கானல், டிச. 26: கொடைக்கானல் மேல்மலைக் கிராமமான பூண்டியில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கொடைக்கானல் மற்றும் கோழிக்கோடு பாக்கு, வாசனைப் பயிர்கள் இயக்கம் இணைந்து பூண்டு சாகுபடி தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாமை நடத்தின.

தோட்டக் கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் குமார் முகாமைத் தொடக்கி வைத்தார். பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் பொன்னுச்சாமி சிறப்பரையாற்றினார். தோட்டக் கலை உதவி இயக்குநர் கிஷோர் பூண்டி பஞ்சாயத்து தலைவர் தாமோதரன் வாழ்த்துரை வழங்கினர்.

முகாமில், பூண்டு சாகுபடியில் சீரிய சாகுபடி தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் மற்றும் முகாமின் நோக்கம் குறித்து தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் சுரேஷ் விளக்கமளித்தார்.

பூண்டில் அதிக விளைச்சலுக்கான ரகங்கள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும் பூச்சி, நோய் மற்றும் நூற்புழு மேலாண்மை, ஊட்டச் சத்துப் பற்றாக்குறை குறித்தும், அறுவடை பின்சார் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கப்பட்டது.

முகாமில், பேராசிரியர்கள் செந்தமிழ்ச்செல்வி, பிரேமலதா, ச.லதா, வெற்றிவேல் காளை, ரகுசந்தர், ஜானகி ஆகியோர் விவசாயிகளிடம் பூண்டு சாகுபடி குறித்தும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமுமளித்தனர்.

நிகழ்ச்சியில், கொடைக்கானல் மேல்மலைக் கிராமங்களான பூம்பாறை, பூண்டி, கவுஞ்சி, மன்னவனூர், கிளாவரை, போலூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**முதலீடு இல்லை, செலவும் இல்லை லாபம் தரும் துளசி வியாபாரம்**

எஸ்.கே. ரவி

First Published : 27 Dec 2010 10:31:30 AM IST

Last Updated : 27 Dec 2010 10:43:44 AM IST

கிருஷ்ணகிரி, டிச. 26: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விளையும் துளசியை அறுவடை செய்யும் கிராம மக்கள், அவற்றை பெங்களூருக்கு அனுப்பி மாதம் ரூ. 10 ஆயிரம் வரை வருவாய் ஈட்டுகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் மா, காய்கறிகள், ரோஜா பூக்களை அதிகமாக சாகுபடி செய்கின்றனர். இங்கு உற்பத்தியாகும் காய்கறிகள், பழங்கள், பூக்கள் வெளிமாநிலங்கள் மட்டுமல்லாது, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆனால், எந்த முதலீடும் இல்லாமல் மாதம் ரூ. 10 ஆயிரம் வரை சம்பாதிக்கத் தொடங்கியுள்ளனர் கிருஷ்ணகிரி மாவட்ட கிராம மக்கள். ஆம். மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகள், மாந்தோப்புகள், ஆற்றங்கரை, வாய்க்கால்களில் அதிக அளவில் துளசி செடிகள் இயற்கையாகவே விளைகின்றன.

மருத்துவ குணம் கொண்ட துளசியை, இந்து கோயில்களில் பயன்படுத்துகின்றனர். ஐயப்பன் கோயில்களில் சுவாமிக்கு துளசி மாலை அணிவிப்பது சிறப்பு. இத்தனை சிறப்புமிக்க துளசியை கிராம மக்கள் பகல் நேரங்களில் அறுவடை செய்து, மாலையாக கட்டி வருமானம் ஈட்டுகின்றனர்.

இந்த துளசி மாலையை ஒரு முழம் 75 பைசா முதல் ஒரு ரூபாய் என கிராம மக்களிடம் இருந்து சிறு வியாபாரிகள் வாங்குகின்றனர். கிராம மக்கள் பலரிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட துளசி சரம், மாலைகளை சிறு வியாபாரிகள், மொத்த வியாபாரிகளிடம் கூடுதல் விலைக்கு விற்கின்றனர்.

ஆயிரக்கணக்கான துளசி சரம், மாலைகளை வாங்கும் மொத்த வியாபாரிகள் அவற்றை பெங்களூருக்கு ஏற்றுமதி செய்து கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றனர்.

இதுகுறித்து சிறுவியாபாரி சின்னையன்(48) கூறியது: ஐப்பசி முதல் தை மாதம் வரை துளசி மாலைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். ஐயப்ப பக்தர்கள் துளசி மாலையை விரும்பி வாங்குவதால் கார்த்திகை, மார்கழி மாதங்களில் துளசி மாலைக்கு அதிக கிராக்கி இருக்கும். அப்போது துளசி சரம் ஒரு முழம் ரூ. 5 முதல் 8 வரை விற்பனையாகும்.

இதே துளசி சரம், பெங்களூரில் ரூ. 10 முதல் ரூ. 20 வரை விற்பனையாகிறது. சிறிய, பெரிய துளசி மாலைகள் ரூ. 100 முதல் ரூ. 200 வரை விற்கப்படுகின்றன. இது முதலீடு இல்லாத தொழில். ஆண்டுக்கு 4 மாதங்களே செய்யக்கூடிய இத்தொழிலால் மாதம் ரூ. 10 ஆயிரம் வரை வருமானம் ஈட்டலாம். விவசாயிகள் முறையாக துளசி பயிரிட்டால் கூடுதல் லாபம் பெறலாம் என்றார்.

**கறிக்கோழி விலை**

First Published : 27 Dec 2010 10:36:35 AM IST

Last Updated : 27 Dec 2010 10:41:07 AM IST

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்தபடி, கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 52, முட்டைக் கோழி கிலோ ரூ. 33.

**முட்டை விலை**

First Published : 27 Dec 2010 10:36:29 AM IST

நாமக்கல், டிச.26: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்தபடி, முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.69, சென்னையில் ரூ. 2.70.

**முட்டை ஏற்றுமதி 22 சதவீதம் குறைந்தது**

First Published : 27 Dec 2010 10:35:58 AM IST

Last Updated : 27 Dec 2010 10:40:11 AM IST

நாமக்கல், டிச.26: பறவைக்காய்ச்சல் பீதி காரணமாக சில நாடுகள் முட்டை இறக்குமதி செய்ய தயக்கம் காட்டுவதால் இந்தியாவின் நடப்பாண்டு முட்டை ஏற்றுமதி 22 சதவீதம் குறைந்துள்ளதாக தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு தெரிவித்துள்ளது.

2009-ம் ஆண்டு மொத்தம் 952.4 கோடி முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் கடந்த 11 மாதங்களில் வெறும் 687.9 மில்லியன் முட்டைகளே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

முட்டை ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள விகேஎஸ் பண்ணையின் நிர்வாக இயக்குநர் சிவக்குமாரிடம் இது குறித்து கேட்டபோது, பறவைக் காய்ச்சல் நோய் பரவியபோது இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்ய பல நாடுகள் தடை விதித்தன. கடந்த ஜூன் மாதம் இந்நோயில் இருந்து பாதுகாக்கப்பட்ட பகுதியாக இந்தியா அறிவிக்கப்பட்ட போதிலும், ஐக்கிய அரபு நாடுகள், கத்தார், குவைத் ஈராக் ஆகியவை இன்னும் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான தடையை நீட்டித்து வருகின்றன.

இதனால் ஏற்றுமதி வெகுவாகக் குறைந்துள்ளது.

அதேபோல் முட்டை விலை உயர்ந்துள்ளதாலும் ஆப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கான ஏற்றுமதி கணிசமாகக் குறைந்துள்ளது.

குறைந்த விலைக்கு அந்த நாட்டு விவசாயிகளே முட்டைகளை உற்பத்தி செய்வதால் அவை இறக்குமதியில் இப்போது அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை என்றார்.

இந்தியாவில் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கம் இல்லை என்பதை சர்வதேச விலங்குகள் நல நிறுவனம் அங்கீகரிக்காததால்தான் சில நாடுகள் இந்தியாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்ய தயக்கம் காட்டுகின்றன.

நோய் முழுவதும் ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை இந்த அமைப்புகளிடம் எடுத்துக் கூறி ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே கோழிப் பண்ணை உரிமையாளர்களின் எதிர்பார்ப்பு.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி மறியல்**

First Published : 28 Dec 2010 03:32:46 AM IST



சென்னை, டிச. 27: பால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டுமென வலியுறுத்தி சென்னையில் திங்கள்கிழமை மறியல் போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் சென்னை மெமோரியல் அரங்கம் அருகில் நடைபெற்ற இந்த மறியல் போராட்டத்துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் கே. முகமது அலி தலைமை வகித்தார்.

பால் உற்பத்தியாளர்களுக்கு இப்போது லிட்டருக்கு ரூ. 12 முதல் ரூ. 13 மட்டுமே கொள்முதல் விலையாக வழங்கப்படுகிறது. தீவனத்தின் விலை, மாடுகளைப் பராமரிக்கும் செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது. எனவே, பசும்பாலுக்கு லிட்டருக்கு குறைந்தபட்சம் ரூ. 5, எருமைப்பாலுக்கு ரூ. 8 கூடுதல் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஆந்திரம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி மாநிலங்களைப் போல தமிழக அரசும் லிட்டருக்கு ரூ. 2 வீதம் மானியம் வழங்க வேண்டும். கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு மானியம் அளித்து, அச்சங்கங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் மறியல் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

போராட்டத்தைத் தொடங்கி வைத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி. ராமகிருஷ்ணன் பேசியது:

பால் உற்பத்தியாளர்களையும், தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களையும் பாதுகாப்பதற்கான கொள்கைகள் தி.மு.க. அரசிடம் இல்லை. இதனால் இந்த தொழிலே அழிந்து வருகிறது. எனவே, பால் உற்பத்தித் தொழிலை பாதுகாப்பதற்காக, பால் உற்பத்தியாளர்கள் நடத்தக் கூடிய இந்தப் போராட்டத்தை மார்க்சிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. பால் உற்பத்தியாளர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று, பாலுக்கு நியாயமான கொள்முதல் விலை வழங்க அரசு முன்வர வேண்டும் என்றார் ராமகிருஷ்ணன்.

÷இந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்ட 500-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.ன

**ஸ்பெக்ட்ரமும் வெங்காயமும்**

வை.ராமச்சந்திரன்

First Published : 28 Dec 2010 12:00:00 AM IST

உரிக்கஉரிக்க ஒன்றுமில்லாமல் போவதற்கு ஸ்பெக்ட்ரம் விவகாரம் ஒன்றும் வெங்காயம் அல்ல... அது இந்திய நாட்டுக்கே ஏற்பட்ட அவமானம்.

நாட்டையே உலுக்கும் ஓர் ஊழல் பிரச்னை வெடித்தால், அதை மக்கள் மறக்கச் செய்யவும், ஊழலைத் திசைதிருப்புவதும் வேறொரு பிரச்னையைப் பெரிதாக்குவதும் அரசியல்வாதிகள் காலங்காலமாகச் செய்துவரும் ராஜதந்திரம்.

தற்போது மிகப்பெரிய பிரச்னையாகப் பேசப்பட்டுவரும் வெங்காய விலை ஏற்றமும் இதைப் போன்றதுதானோ என எண்ணத் தோன்றுகிறது.

மக்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் ஸ்பெக்ட்ரம் ஊழல் பிரச்னையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அந்த இடத்தை வெங்காய விலை ஏற்றத்துக்கு ஊடகங்கள் ஒதுக்கி வருகின்றன. ஸ்பெக்ட்ரம் ஊழலுடன் ஒப்பிடுகையில் வெங்காய விலை ஏற்றம் ஒரு பிரச்னையே அல்ல. இதுவரை நடந்த ஊழல்களில் மிகப்பெரிய ஊழல் ஸ்பெக்ட்ரம்தான் எனக் கூறப்படுகிறது. அதிலும் நம்நாட்டுக்கு வரவேண்டிய ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரம் கோடி ரூபாய் வீணடிக்கப்பட்டு சில தனியார் தொழிலதிபர்களுக்கு மட்டுமல்லாமல், வெளிநாட்டவருக்கும் ஆதாயமாக்கப்பட்டுள்ளது.

இது வெறும் பொருளாதாரப் பிரச்னை மட்டுமல்ல. தேசத்தின் பாதுகாப்புக்கே சவால்விடக்கூடிய மிகவும் முக்கியமான பிரச்னை. இந்த ஸ்பெக்ட்ரம் பிரச்னையைத்தான், வெங்காய விலை உயர்வுப் பிரச்னை மூலம் திசை திருப்பிவிடலாம் என அரசியல்வாதிகள் கனவுகாண்கின்றனர் போலும். இவர்கள் நினைக்கும் அளவுக்கு மக்கள் முட்டாள்கள் அல்ல.

தேசத்தின் கடைக்கோடியில் உள்ள சிறு கிராம வாசிகளுக்குக்கூட ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஏதோ மிகப்பெரிய தவறு நடந்திருக்கிறது; அதற்கு மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசும், திமுகவின் அதிகார மையமும்தான் காரணம் என்ற அளவிலாவது புரிந்து வைத்துள்ளனர்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில், ஒரு பூதாகாரமான பிரச்னை உருவாகிறது என்றால், அதிலிருந்து மக்களைத் திசைதிருப்ப, முதலில் தலித் என்ற ஆயுதம் எய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, பார்ப்பனிய ஆதிக்கம், இந்துமத துவேஷம் போன்ற பிரச்னைகள் எழுப்பப்பட்டன. வேறு வழியே இல்லை என்றால் இலங்கைத் தமிழர் பிரச்னை பெரிதாகப் பேசப்படும். இதன் மூலம் ஏற்கெனவே உள்ள பிரச்னை திசைதிருப்பப்பட்டு விடும்.

மத்திய அரசுக்கு இருக்கவே இருக்கிறது தீவிரவாதம், மதவாதம் உள்ளிட்ட பிரச்னைகள். தற்போது வெங்காயம் கைகொடுத்திருக்கிறது. 50 ரூபாய் லஞ்சம் வாங்கிய அரசு ஊழியரை கொலைக்குற்றவாளியைப்போல அழைத்துச் சென்று சிறையில் அடைக்கின்றனர். ஆனால், ஆயிரமாயிரம் கோடிகளை வாரிச் சுருட்டி வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கும் அரசியல்வாதிகள், போலீஸ் பாதுகாப்புடன் உலா வருகின்றனர்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஊழல், ஆதர்ஷ் குடியிருப்பு ஊழல், ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரம் கோடி என்ற இமாலய ஊழல் எனத் தொடர்ந்து பல்வேறு ஊழல்கள் கம்பீரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், மத்திய அரசோ எந்த ஒரு தீவிர நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எதிர்க்கட்சிகளின் கோரிக்கையான நாடாளுமன்றக் கூட்டுக்குழுவை அமைக்கவும் முன்வரவில்லை.

இந்த ஊழலை எதிர்க்க, இப்போது நீதிமன்றம் மட்டுமே ஒரு வாய்ப்பாக உள்ளது. ஆனால், சட்டத்தின் சந்துபொந்துகளிலும் நுழைந்து தப்பிவரும் ஊழல்வாதிகளைத் தண்டிக்க மக்களிடம் வாக்கு என்னும் ஆயுதம் உள்ளது.

இனியாவது ஊழல்வாதிகளை இனம்கண்டு, அவர்களை அரசியலில் இருந்து அப்புறப்படுத்த மக்கள் முன்வர வேண்டும்.

### வெங்காய விலை

# ரேஷன் கடையில் ₹ 54; வெளி மார்க்கெட்டிலோ ₹ 45

**திருவள்ளூர், டிச 27:** திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள உள்ளூர் காய்கறி மார்க்கெட்டுகளில் வெங்காயம் ஒரு கிலோ ₹ 45 என விற்கும் போது, அரசு நிறுவனமான ரேஷன் கடையில் கிலோ ₹ 54 என விற்கப்படுவதால் பொதுமக்கள் வியப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

சமையலில் முக்கிய பங்கு வகிக்கும் வெங்காய விலை கடந்த வாரத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் ₹ 80 வரை உயர்ந்தது. இதற்கு முக்கிய காரணமாக, வடகிழக்கு பருவமழை, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உற்பத்தி குறைவு போன்ற காரணங்கள் சொல்லப்பட்டது.

இந்நிலையில் வெங்காய விலை உயர்வு அரசியல் வட்டாரத்திலும் பரபரப்பாக பேசப்பட்டது. வெங்காய விலையை குறைக்க தமிழக அரசு வரி விலக்கு, ஏற்றுமதிக்கு தடை என அதிரடி நடவடிக்கைகள் எடுத்தது. இம்மாவட்டத்தில் கடந்த 3 தினங்களாக ₹ 70, ₹ 60 என குறைந்து தரமான



ரேஷன் கடையில் கூடுதல் விலையில் விற்கப்படும் வெங்காயம்.

வெங்காயம் திருவள்ளூர் மார்க்கெட்டில் ₹ 50-ம், அளவில் சிறிய வெங்காயம் ₹ 45 எனவும் திங்கள்கிழமை விற்கப்பட்டது.

இந்நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் கூட்டுறவுத் துறை சார்பில் திங்கள்கிழமை வெங்காய விற்பனை துவங்கியுள்ளது. முதல் கட்டமாக ஒரு கடைக்கு 50 கிலோ எடை கொண்ட 2 மூட்டைகள் விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ளன.

ரேஷன் கடைகளில் வெங்காய மூட்டை இருப்பதை பார்த்த மக்கள் ஆவலுடன் வாங்கச் சென்றால் வெளிமார்க்கெட்டை விட கூடுதல் விலையாக 1 கிலோ ₹ 54 என விற்கப்படுவதை கண்டு வியப்படைந்தனர். இதனால் பலர் வெங்காயத்தை வாங்காமலேயே திரும்பிச் சென்றனர்.

ரேஷன் கடைகளில் வெங்காயத்தை விற்பதற்கு எடுத்த தமிழக அரசின் முயற்சி பாராட்டத் தக்கது. ஆனால் வெளி மார்க்கெட்டை விட கிலோவிற்கு ₹ 5 குறைவாக இருந்தால் மட்டுமே மக்கள் வாங்குவார்கள். ஆகையால் மாவட்டம் வாரியாக அன்றைய வெளி மார்க்கெட் விலையைக் கண்காணித்து அதைவிடக் குறைவாக ரேஷன் கடைகளில் வெங்காய விற்பனையை செய்ய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# தக்காளி கிலோ ₹ 65; வெங்காய விலை மீண்டும் உயர்வு

**சென்னை, டிச. 27:** தக்காளி விலை கிலோ ₹ 65-ஆக உயர்ந்துள்ளது. கடந்த சில நாள்களாக குறைந்து வந்த வெங்காயத்தின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

மழையால் கர்நாடகம், ஆந்திரம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களில் கடந்த சில மாதங்களாக விவசாயம் கடுமையாக பாதிப்படைந்தது. இதனால் வெங்காயம், தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய் என அனைத்துக் காய்கறிகளின் விலையும் கிடுகிடுவென உயர்ந்தது. குறிப்பாக தக்காளியின் விலை கடந்த சில வாரங்களாக ஏறுமுகமாகவே இருந்து வருகிறது. கிலோ ₹ 40, முதல் ₹ 50 வரை விற்பனையான தக்காளி, திங்கள்கிழமை கிலோ ₹ 65-ஐ எட்டியது.

இரவில் நிலவும் கடும் பனிப்பொழிவு காரணமாக தக்காளி விளைச்சலை கடுமையாக பாதித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். சென்னை கோயம்பேடு சந்தைக்கு நாள்தோறும் 80 லாரிகள் வரை தக்காளி வரும். ஆனால் கடந்த சில வாரங்களாக தக்காளி வரத்து வெகுவாக குறைந்தது. இந்த நிலையில் கடந்த 2 நாள்களாக 30 லாரி தக்காளியே வருகிறது. இதனால் கோயம்பேட்டில் தக்காளி கிலோ ₹ 60 வரையிலும் மற்ற பகுதிகளில் கிலோ ரூ. 65 வரையிலும் விற்பனையானது.

கிலோ ₹ 100 வரை உயர்ந்த வெங்காயம் கடந்த சில நாள்களாக படிப்படியாகக் குறைந்து கிலோ ₹ 40 வரை விற்பனையானது. இந்த நிலையில் கடந்த 2 நாள்களாக வெங்காயம் வரத்து குறையத் தொடங்கியது. இதனால் திங்கள்கிழமை மீண்டும் கிலோ ₹ 60 முதல் ₹ 70 வரை உயர்ந்தது. பாகிஸ்தானில் இருந்து வெங்காய இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மகாராஷ்டிரம் மாநிலம் பூனா, நாசிக், ஜோலாப்பூர் சந்தைகளில் விலை உயர்ந்தது. இதுவே இப்போதைய விலை உயர்வுக்கு முக்கிய காரணம்.

இதற்கிடையில் நாசிக் சந்தையில் வெங்காயத்தின் விலை குறைந்துள்ளது. எனவே அடுத்த ஓரிரு நாள்களில் வெங்காயத்தின் விலை மீண்டும் குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினமலர்

## தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு: முதல்வர் கருணாநிதி துவக்கி வைத்தார்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,04:14 IST

பல்லாவரம் : பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் நடந்து வரும், தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டை முதல்வர் கருணாநிதி நேற்று துவக்கி வைத்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்கம், தமிழக அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மாநில கவுன்சில் மற்றும் வேல்ஸ் பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து, 18வது தேசிய சிறார் குழந்தைகள் அறிவியல் மாநாடு மற்றும் கண்காட்சியை ஐந்து நாட்களுக்கு நடத்துகின்றன. இதன் துவக்க விழா பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக் கழகத்தில், நேற்று நடந்தது. தமிழக அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மாநில கவுன்சில் உறுப்பினர் செயலர் வின்சென்ட் வரவேற்றார். பல்கலைக் கழக வேந்தர் ஐசரி கணேஷ் தலைமை தாங்கினார். அறிவியல் மாநாடு மற்றும் கண்காட்சியை துவக்கி வைத்து. முதல்வர் கருணாநிதி பேசியதாவது: பத்து முதல் 17 வயதுள்ள குழந்தைகளின் படைப்பாற்றலை வெளிக் கொண்டு வரும் வகையில், இந்த கண்காட்சி அமைந்துள்ளது. குழந்தைகள் தங்கள் படிப்பில் மட்டுமல்லாமல் சமுதாய பிரச்னைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதற்கு இது போன்ற கண்காட்சிகள் ஒரு வாய்ப்பாக அமையும். அறிவியல் மாநாட்டு "நில வளம் - வளமைக்காக பயன்படுத்துவோம், வரும் தலைமுறைக்காக பாதுகாப்போம்' என்ற தலைப்பில் நடைபெறுகிறது. ஒரு நாட்டின் வளத்திற்கு நிலமும், நீரும் மிக முக்கியமானது. இன்றைய நிலையில் இவை இரண்டும் மிக நெருக்கடியான நிலையில் தான் உள்ளன. இதை கருத்தில் கொண்டு, தான் தமிழகத்தில் விவசாயத்தில் நவீன முறையை கையாண்டு உற்பத்தியை அதிகரித்துள்ளோம். ரசாயன உரங்கள் அதிகம் பயன்படுத்துவதால், நிலத்தின் பயன்பாடு அதிகம் பாதிக்கிறது. நிலத்தின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. தமிழகத்தில் மொத்தமுள்ள 1.3 கோடி எக்டர் நிலப் பரப்பில், 2.8 சதவீதம் மட்டுமே விளை நிலமாக உள்ளது. சுற்றுச் சூழலையும், நிலப் பரப்பினையும் பாதுகாக்கும் வகையில், ஜப்பான் வங்கியுடன் இணைந்து தமிழகத்தில் 686 கோடி ரூபாய் மதிப்பில் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. உலக அளவில் பொருளாதாரமும், அறிவுத் திறனும் வளர்ந்து வரும் இன்றைய கால கட்டத்தில் மாணவர்களுக்கு அறிவியல் சிந்தனை, படைப்பாற்றல் ஆகியவை சிறு வயதில் இருந்தே புகட்டப் பட வேண்டும். அதற்கு இந்த கண்காட்சி ஒரு வரப் பிரசாதமாக அமையும். இவ்வாறு முதல்வர் கருணாநிதி பேசினார். மாநாட்டில் அமைச்சர்கள் துரைமுருகன், வேலு, பொன்முடி, தங்கம் தென்னரசு, அன்பரசன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தமிழக அறிவியல் இயக்க தலைவர் கிருஷ்ணசாமி, வேல்ஸ்

பல்கலைக் கழக துணைவேந்தர் ராமச்சந்திரன் மற்றும், தமிழகம், அருணாசல பிரதேசம், மணிப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் மாநாட்டில் திரளாக கலந்து கொண்டனர்.

**எட்டாக்கனியாகிறது தக்காளி கோவையில் கிலோ ரூ. 60**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,00:12 IST

கோவை : கோவையில் நேற்று தக்காளி விலை கிலோ 60 ரூபாயாக உயர்ந்தது. வடகிழக்கு பருவமழையின் தாக்கத்தால் கோவையில் பயிரிடப்பட்டிருந்த பெரும்பாலான தக்காளிச் செடிகள் அழுகி நாசமடைந்தன. ஒரு சில தோட்டங்களில் பயிரிட்டிருந்த தக்காளி ரகங்கள் கோவை மார்க்கெட்டிற்கு வந்து கொண்டிருந்தது. நேற்று மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து திடீரென குறைந்தது. அதே போல் ஓசூர், தருமபுரி, கிருஷ்ணகிரி பகுதிகளில் இருந்து வரும் "ஹைபிரிட்' தக்காளி ரகங்கள் கோவை மார்க்கெட்டிற்கு வழக்கமாக 7 முதல் 10 லாரிகளில் வரும்; நேற்று இரண்டு லாரிகளில் மட்டுமே வந்தன. கோவை புற நகர்பகுதிகளான நாச்சிபாளையம், மதுக்கரை, பாலத்துறை, செம்மேடு, ஆலாந்துறை, தொண்டாமுத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து ஒரு நாளைக்கு 10 லாரி தக்காளி கோவை மாவட்டம் முழுக்க விற்பனைக்கு கொண்டு செல்லப்படும். இந்த தக்காளி உற்பத்தியும் முழுமையாக குறைந்து போனது.இதனால் நேற்று மார்க்கெட்டில் தக்காளிக்கு கிராக்கி ஏற்பட்டது. தேவை அதிகரித்ததால் விலை பலமடங்கு உயர்ந்தது. நேற்று முன்தினம் அதிகபட்சமாக கிலோ 35 ரூபாய்க்கு விற்ற தக்காளி, நேற்று கிலோ 50 முதல் 60 ரூபாய் வரை விற்பனையானது. டி.கே. மார்க்கெட் வியாபாரி மணி கூறியதாவது: மார்க்கெட்டிற்கு சரக்கு வருவதை பொறுத்தே, விலை நிர்ணயம் செய்யப்படும். நேற்று காலை நடந்த தக்காளி ஏலத்தில் 25 கிலோ எடை கொண்ட ஒரு டிப்பர் தக்காளி 1,200 ரூபாய்க்கு ஏலம் போனது. வழக்கமாக இதே டிப்பர் ரூ.300 முதல் அதிகபட்சமாக 500 வரை ஏலம் போகும். இதனால், தக்காளிக்கு கடும் கிராக்கி ஏற்பட்டது. விலை உயர்வு காரணமாக வியாபாரிகள் ஏமாற்றத்தோடு குறைந்த அளவு வாங்கி சென்றனர். தருமபுரி, ஓசூரில் இருந்து வரும் தக்காளியின் அளவு குறைந்தது. உள்ளூரிலிந்து வந்த தக்காளியின் அளவும் குறைந்தது. இதனால் விலை உயர்ந்து. கிலோ ரூ.50 முதல் ரூ. 60 வரை விற்பனையாகிறது. வெங்காயத்தின் வரத்து குறைந்ததால் அதுவும் பழைய படி கிலோ 60 ரூபாய் ஆகியுள்ளது. சிறிய வெங்காயம் கிலோ ரூ.40 ஆனது. இப்படி எல்லா காய்கறிகளின் விலையும் மீண்டும் உயர்ந்துவிட்டது, என்றார்.

## பொள்ளாச்சியில் பூக்கள் விலை "கிடுகிடு' உயர்வு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,00:08 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி பூ மார்க்கெட்டிற்கு பனி பொழிவு காரணமாக பூக்கள் வரத்து குறைந்து, விலை உயர்ந்து வருகிறது. மல்லிகை பூ கிலோ 900 ரூபாய் வரை விலை போனது.பொள்ளாச்சி பூ மார்க்கெட்டிற்கு திண்டுக்கல், நிலகோட்டை, மதுரை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து மல்லிகை, முல்லை, பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளிலிருந்து அரளி, கோழிக்கொண்டை உள்ளிட்ட பூக்களும் பூ மார்க்கெட்டிருக்கு வரத்துள்ளது. இங்கு வரும் பூக்களில் 50 சதவீதம் கேரள மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறது.வடகிழக்கு பருவ மழை, பனி பொழிவு காரணமாக பல்வேறு பகுதிகளிலும் பூக்கள் கருகி, சாகுபடி குறைந்துள்ளது. இதனால், வழக்கமாக இரண்டு டன் வரத்தாக இருக்கும் பூக்கள் இம்மாதம் 400 கிலோ மட்டுமே வரத்தாக உள்ளது.இதில், மல்லிகை பூ 15 கிலோ மட்டுமே வரத்தாக உள்ளது. பொள்ளாச்சி சந்தையில், பூவுக்கு கிராக்கி உள்ளதால், கேரளாவுக்கு பூ அனுப்புவது தடைபட்டுள்ளது. சந்தைக்கு வரும் மல்லிகை பூக்களை வழக்கமான வாடிக்கையாளர்களுக்கு விற்பதற்காக, ஒரு சில வியாபாரிகள் பதுக்கி வைத்தும் விற்பனை செய்கின்றனர். வரத்து குறைந்துள்ளதால், அனைத்து ரக பூக்களின் விலையும் கிடு,கிடுவென உயர்ந்துள்ளது.நேற்றைய பூ விலை நிலவரம் (கிலோவுக்கு) : மல்லிகை - 900, சம்பங்கி - 150, முல்லை - 400, கோழிகொண்டை - 70, ஜாதிப்பூ - 300, அரளி - 200, செவ்வந்தி - 220.பூ மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், "பனி பொழிவு காரமாக அனைத்து ரக பூ சாகுபடியும் குறைந்து விலை அதிகரித்துள்ளது. பொங்கல் பண்டிகை வரை வரத்து குறைந்திருக்கும். அதன்பின், வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஆனால், அப்போது தேவை அதிகரிக்கும் வாய்ப்புள்ளதால், விலை உயரலாம். மல்லிகை பூ வரத்தை பொறுத்து விலை மாறுப்படும். அதிகபட்சமாக ஒரு கிலோ ஆயிரம் ரூபாய் வரை விலை போகும். இதற்கு மேல் விலை உயர வாய்ப்பில்லை' என்றனர்.

## விதைப்புக் கருவியின் மூலம் வேர்க்கடலை சாகுபடி செயல்விளக்கம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,01:00 IST

திண்டிவனம் :நெய்குப்பி கிராமத்தில் விதைப்புக் கருவி மூலம் வேர்க்கடலை சாகுபடி செயல்விளக்கம் நடந்தது.திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் நெய்குப்பி கிராமத்தைச் சேர்ந்த தினேஷ் என்பவரது நிலத்தில் செயல்விளக்கம் நடந்தது. நிகழ்ச்சிக்கு திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர்

ராமமூர்த்தி தலைமை தாங்கி இயந்திரத்தின் மூலம் வேர்க்கடலை விதைப்பு குறித்து விளக்கினார்.அவர் பேசுகையில், வேர்க்கடலை விதைப்பு இயந்திரம் மூலம் ஒரு நாளைக்கு 6 முதல் 7 ஏக்கர் வரை விதைக்கலாம். செடிக்குச் செடி 10 செ.மீ., இடைவெளி விட முடியும். இந்த கருவி மூலம் விதைக்க ஒரு ஏக்கருக்கு 50 கிலோ விதை போதுமானது. திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள இந்த கருவியை விவசாயிகள் ஒரு நாளுக்கு 1000 ரூபாய் கொடுத்து வாடகைக்கு பயன்படுத்தலாம் என்று தெரிவித்தார்.நிகழ்ச்சியில் திட்ட விஞ்ஞானி அன்புமணி செயல் முறை விளக்கம் அளித்தார். முகாம் ஏற்பாடுகளை ஆராய்ச்சியாளர்கள் சுப்ரமணி, பாரதி செய்திருந்தனர்.

**37 நாட்களுக்கு பின்மேட்டூர் அணை திறப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,03:29 IST

மேட்டூர்: டெல்டா பாசனத்திற்கான நீர் தேவை அதிகரித்துள்ளதால் 37 நாட்களுக்கு பின் சம்பா சாகுபடிக்காக இன்று (டிச.28) காலை 6 மணி முதல் விநாடிக்கு 10 ஆயிரம் கனஅடி நீர் பாசனத்திற்கு திறக்கப்படுகிறது.மேட்டூர் அணையில் இருந்து ஜூலை 28ல் டெல்டா பாசனத்திற்கு நீர் திறக்கப்பட்டது. நீரின் மூலம் டெல்டா மாவட்டங்களில் 2.40 ஏக்கரில் விவசாயிகள் குறுவை சாகுபடி நிறைவு செய்தனர். தொடர்ந்து 8.2 லட்சம் ஏக்கரில் விவசாயிகள் சம்பாநெல் பயிர் சாகுபடி செய்தனர். டெல்டா நீர்திறப்பால் மேட்டூர் அணை நீர்மட்டம் 60 அடியாக குறைந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை தீவிரம் அடைந்து நீர்வரத்து அதிகரித்ததால் அக்டோபர் 29ல் 60 அடியாக இருந்த நீர்மட்டம் டிச.,2ம் தேதி 120 அடியை எட்டியது. அதேநேரம் டெல்டா மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்ததால் மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு நவ.,21ம் தேதி நிறுத்தப்பட்டது.அதன் பின்னர் நேற்று வரை பாசனத்திற்கு நீர்திறக்கப்படவில்லை. எனினும், அணை நிரம்பியதால் கடந்த 2ம் தேதி முதல் நேற்று வரை 11.8 டி.எம்.சி., உபரி நீர் காவிரியில் திறக்கப்பட்டது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில் மழை தீவிரம் குறைந்து, கடைமடை பகுதியில் வெள்ளமும் வடிந்ததால் பாசனத்திற்கான நீர்தேவை அதிகரித்தது.அதனால், 37 நாட்களுக்கு பின் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு இன்று காலை 6 மணி முதல் விநாடிக்கு 10 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படுகிறது. நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 3,085 கனஅடி நீர்வந்தது. நீர்வரத்தை விட நீர்வெளியேற்றம் அதிகமாக இருப்பதால் 25 நாட்களாக 120 அடியில் நீடித்த மேட்டூர் அணை நீர்மட்டம் இன்று முதல் குறைய துவங்கும்.

**கரும்பு விவசாயிகளுக்கு ரூ.1.5 கோடி ஒரே தவணையில் பட்டுவாடா**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,02:04 IST

மதுரை:அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கான தொகை ஒன்றரை கோடி ரூபாயை கலெக்டர் காமராஜ் வழங்கினார்.அவர் கூறியதாவது: அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இந்த ஆண்டு அரவைக்கான பருவம் கடந்த டிச. 16ம் தேதி துவங்கியது. நடப்பு அரவை பருவத்தில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆலை துவங்கிய டிச. 16 முதல் 26 வரை மொத்தம் 13 ஆயிரத்து 422 டன் கரும்பை 8.18 சதவீத சர்க்கரை கட்டுமானத்தில் அரவை செய்து 7 ஆயிரத்து 430 குவின்டால் சர்க்கரையை உற்பத்தி செய்துள்ளது.அரவை துவங்கிய டிச. 16 முதல் 22ம் தேதி வரை ஆலையில் உறுப்பினராக உள்ள 176 விவசாயிகள் 7 ஆயிரத்து 921 டன் கரும்பை அனுப்பி உள்ளனர். இவர்களுக்கு டன் ஒன்றுக்கு 1900 ரூபாய் விலையில், ஒரு வார காலத்திற்குள் மொத்தம் ஒன்றரை கோடி ரூபாய் நேற்று ஒரே தவணையில் வழங்கப்பட்டது. கரும்பு விவசாயிகளுக்கு வாகன வாடகையை ஆலையே ஏற்றுக் கொண்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு இனி பணம் ஒரே தவணையில் பட்டுவாடா செய்யப்படும். டிச. 23 முதல் 29 வரையுள்ள கரும்புக்கு டிச. 30ம் தேதி பட்டுவாடா செய்யப்படும், என கலெக்டர் கூறினார். மூர்த்தி எம்.எல்.ஏ., ஆலையின் தனி அலுவலர் நந்தகோபால் பங்கேற்றனர்.

**விவசாயத் தொழிலாளர் சங்க கொடியேற்று நிகழ்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,03:24 IST

கரூர்: கரூரில் கீழ வெண்மணி தியாகிகள் நினைவு நாளையொட்டி அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், ஆறு இடத்தில் கொடியேற்று நிகழ்ச்சி, தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடந்தது.நாகை மாவட்டம், கீழவெண்மணி கிராமத்தில் நெல் கூலி உயர்வு கேட்டுப் போராடிய 44 விவசாயத் தொழிலாளர்கள் உயிரோடு தீ வைத்து எரிக்கப்பட்டனர். இந்த நினைவு நாளை முன்னிட்டு கரூர் ஒன்றியத்தில், இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் கொடியேற்று நிகழ்ச்சி, தெருமுனை பிரச்சாரம் நடந்தது.தளவாபாளையத்தில் ஸ்ரீராம் தலைமையில், மாவட்ட செயலாளர் இளங்கோவன் கொடியே ற்றி வைத்தார். கமராஜ் நகரில் துரைசாமி தலைமையில் ஒன்றியத் தலைவர் அன்பரசன், திருக்காடுதுறையில் கந்தசாமி தலைமையில் சங்கர், செல்வநகரில் ரா.முருகேசன் தலைமையில் ஒன்றிய செயலாளர் சி.முருகேசன், மறவபாளையத்தில் மாவட்டக்குழு உறுப்பினர் கந்தசாமி ஆகியோர் கொடியேற்றிப் பேசினர்.

**நெற்பயிரில் குலை நோய்; 300 ஏக்கர் விவசாயம் வீண்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,02:42 IST

சிவகங்கை :தாயமங்கலம் பிர்க்காவில் குலைநோய் தாக்கி, 300 ஏக்கர் நெற்பயிர்கள் பதராகின. இழப்பீடு கோரி விவசாயிகள் அதிகாரிகளிடம் முறையிட்டனர்.தாயமங்கலம், நாரணமங்கலம், சோமாசி, சக்கரபாணி, கிளியேந்தல், சாத்தமங்கலத்தில் 1,000 ஏக்கரில் நெல் நடவு செய்துள்ளனர். டீலக்ஸ் பொன்னி, ஜோதி, ஜெ.ஜி.எல்., நெல் ரகம் பயிரிடப்பட்டுள்ளது. தொடர் மழையால் கண்மாய்களில் உடைப்பு ஏற்பட்டு நீர், வயல்களுக்குள் புகுந்தது. பயிர்கள் தண்ணீரில் மிதந்ததால், குலை நோய் தாக்கியது. விளையும் தருணத்தில் நோய் பரவியதால், நெல்லுக்கு பதில் பதரை அறுவடை செய்யும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் லாபம் தரக்கூடிய நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.இழப்பீடு கோரி, விசாயிகள் சிவகங்கையில் நடந்த குறைதீர் கூட்டத்தில், டி.ஆர்.ஓ., வேம்புலிங்கத்திடம் முறையிட்டனர். உரிய நடவடிக்கை எடுப்பதாக, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) தட்சிணாமூர்த்தி உறுதி அளித்தார்.

**மானிய விலையில் பம்ப்செட்டுகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,02:32 IST

முதுகுளத்தூர் : விவசாயத்திற்கு மோட்டார்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்காக விவசாயிகள் தனியாரிடம் சென்று, தேவையான தண்ணீரினை பெறுவதற்கு அதிகமான தொகைகளை வழங்கவேண்டியுள்ளது. இதை கருத்தில் கொண்டு சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மாநியத்தில் 5 எம்பி (குதிரை வாட்) திறனுள்ள மோட்டார் பம்ப்செட்டுகள் வழங்கப்பட்டு வருவதாக, முதுகுளத்தூர் வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். இச்சலுகை முதலில் வரும் குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு மட்டுமே உள்ளதால், இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்துமாறு தெரிவித்துள்ளார்.

**"செடி முருங்கையில் அதிக லாபம்'தோட்டக்கலை துறை ஏ.டி., தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,03:19 IST

கரூர்: கிருஷ்ணராயபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:செடி முருங்கை சாகுபடி செய்ய நவம்பர், டிசம்பர் மாதங்கள் மிகவும் ஏற்றது. செடி முருங்கை எல்லா மண் வகையிலும் வளரும். எனினும் மணல் கலந்த செம்மண் அல்லது கரிசல் பூமி மிகவும் ஏற்றது. மண்ணில் கார அமிலத்தன்மை ஆறு முதல் 7.5 வரை இருக்க வேண்டும். முருங்கை சாகுபடி செய்ய பி.கே.எம்.,1, 2, கே.ம்.,1 ரகங்களை தேர்வு செய்து நடவு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 200 கிராம் விதை போதுமானது.இதற்கு நிலைத்தை நன்கு உழுது செய்து பின் 2.5 மீட்டர் இடைவெளியில் 45:45:45 செ.மீ., நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகள் எடுக்க ÷வ்ணடும். குழிகளை ஒருவாரம் ஆறப்போட்டு விட்டு பின் குழி ஒன்றுக்கு நன்கு மக்கிய தொழுஉரம் 15 கிலோ மற்றும் மேல் மண் ஆகியவற்றை சம அளவில் கலந்து குழிகளை நிரப்ப வேண்டும்.

குழிகளை சுற்றி 60 செ.மீ., அகலத்துக்கு நீர் பாச்சுவதுக்கு வாய்க்கால் அமைக்க வேண்டும்.குழிகளின் மத்தியில் மூன்று செ.மி., ஆழத்தில் விதைகளை விதைக்க வேண்டும். ஒரு குழியில் ஒன்று அல்லது இரண்டு விதைகளை விதைக்க வேண்டும். விதைத்த 7 முதல் 10 நாட்களுக்குள் விதைகள் முளைக்கும். விதைப்பதற்கு முன் மூடிய குழிகளில் நீர் ஊற்ற வேண்டும். விதைத்த மூன்றாம் நாள் மீண்டும் நீர் பாய்ச்ச வேண்டும். செடி ஒன்றுக்கு 100 கிராம் யூரியா, 100 கிராம் சூப்பர் பாஸ்பேட், 30 கிராம் பொட்டாஷ் ஆகிவற்றை விதைத்த மூன்றாவது மாதத்தில் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும். ஆறாவது மாதத்தில் யூரியா மட்டும் ஒரு செடிக்கு 100 கிராம் இட வேண்டும்.செடிகள் ஒரு மீட்டர் உயரம் வளர்ந்தவுடன் கிள்ளி விட வேண்டும். இவ்வாறு செய்தால் பக்க கிளைகள் அதிகம் தோன்றும். இதனால் மகசூல் கிடைக்கும். செடி முருங்கையில் பழ ஈக்ககளின் குஞ்சுகள் காயைத்தின்று சேதப்படுத்தும். இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட காய்களை சேகரித்து அழிக்க வேண்டும்.

பென்தியான், டைக்குளோர்வாஸ் மானோகுரோட்டோபாஸ் ஆகியவற்றில் ஏதாவது ஒரு மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். மருந்து தெளிப்பதற்கு முன் காய்களை பறித்துவிட வேண்டும். மருந்து தெளித்த பத்து நாட்களுக்கு அறுவடை செய்யக்கூடாது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**குறைந்து வரும் வெங்காய விலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,01:11 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவி., பகுதிகளில் சிறிய வெங்காயம் சாகுபடி அதிகளவில் நடக்கிறது. விளைச்சல் சரிவர இல்லாததால் விலை உயர்ந்தது. கடந்த வாரம் ஒரு கிலோ 38 ரூபாய் வரை விற்றது. தற்போது வெளி மாவட்டங்களிலிருந்து வரத்து துவங்கியுள்ளதால் நேற்று ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்பனையானது.

**தண்ணீரின்றி கருகும் நெற் பயிர்கள்மணிமுத்தாறு பாசன விவசாயிகள் வருத்தம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,03:05 IST

திருநெல்வேலி:கருகும் நெற் பயிர்களை பாதுகாக்க மணிமுத்தாறு ரீச்களில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு சார்பில் அளிக்கப்பட்ட மனுவில் தெரிவித்துள்ளதாவது:மணிமுத்தாறு கால்வாயில் 3வது ரீச்சில் 120 குளங்களும், 4வது ரீச்சில் 110 குளங்களும் உள்ளன. இந்த குளங்களில் கடந்த நவம்பர் மாதம் பெய்த மழையால் அனைத்து குள பாசனம் மூலம் நெற் பயிர்கள் நடவு செய்யப்பட்டுள்ளது.ஆனால் தற்போது ஏராளமான பரப்பில் நெற் பயிர்கள் கருகும் அபாயம் உள்ளது. 4வது ரீச்சில் கூந்தகுளம் பறவைகள் சரணாலயம் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது. எனவே, மணிமுத்தாறு பாசன 3வது ரீச் மற்றும் 4வது ரீச்களில் நன்செய் நிலங்களின் பயிர்களை பாதுகாக்க வேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நன்செய் நிலங்களில் தொழி உழவு அவசியம் ஏன்?வேளாண் அதிகாரி விளக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,02:28 IST

தூத்துக்குடி : நன்செய் நிலங்களில் தொழி உழவு அவசியம் குறித்து கிள்ளிகுளம் வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு யோச னை தெரிவித்துள்ளார்.தொழி உழவு ; நன்செய் நிலங்களில் நெல் பயிரிடுவதற்கு முன் நீர் பாய்ச்சி பசுந்தழை, தொழுஉரம் ஆகியன இடப்பட்டு சேறு கலந்த நிலையில் இரும்பு கலப்பை கொண்டோ மரக்கலப்பை கொண்டோ அல்லது தொழி கலக்கும் கலப் பை கொண்டோ நன்கு மடக்கி உழுதல், தொழிஉழவு செய்தல் எனப்படும்.மண்ணில் ஏற்படும் மாற்றங்கள் ; மண்ணின் கனபரிமாணம் குறைக்கப்பட்டு மண் மிருதுவாக்கப்படுகிறது. மண்கட்டிகள் (நீர் சூழ்ந்த நிலையில்) மண் துகள்களாக உடைக்கப்படுகின்றன. தொழி

உழவிற்குப்பின் காய்ந்த மண் ஈரமாக்கப்படும் போது அதனுடன் தங்கியிருக்கும் காற்று வெளியேற்றப்பட்டு மண்கட்டிகள் உடையும் தன் மை பெறுகின்றனர். தொழி உழவிற்கு சாதாரண கலப்பையை விட சுழலக்கூடிய அமைப்புள்ள உழவு கருவிகள் (ரோட்டோவேட்டர்) மிகவும் ஏற்றதாகும். நஞ்சையில் தொழி உழவு செய்யும் பொழுது அதனுடைய சேறு கலக்கும் திசை அடிக்கடி மாறுபடுவதால் மண் கட்டிகளில் ஏற்படும் நுண்ணிய கீறல்கள் தான் சிதற வழிவகுக்கின்றது. எனினும் நாட்டுக்கலப்பை, மண்கட்டி உடைக்கும் கலப்பை போ ன்ற கருவிகளும் தொழி உழவுக்கு ஏற்றதாக இருப்பது ஒவ்வொரு மண்வகைகளின் தன்மையைப் பொறு த்தே அமைகின்றன. சுழலும் அமைப்புள்ள ஷிஃப் ட்ரோலர் தொழிஉழவுக் கருவி நஞ்சைக்கு ஏற்றதாகும். பயன்கள் தொழி உழவு செய்யப்பட்ட நன்செய்நிலத்தில் மண் மிருதுத்தன்மை பெற்று நீர் புகும் தன்மை அதிகரிக்கப்படுகிறது. நாற்று நடுதல் எளிது. சிக்கனமுறையில் நீர் மற்றும் ஊட்டச்சத்துக்கள் அளித்தல் ஏதுவாகிறது. மண்ணின் பௌதீக, ரசாயன, நுண்ணுரிய குணங்களும் மேம்படுத்தப்படுகின்றன. நெல் வயலில் களைச் செடிகள் அழிக்கப்படுவதுடன், களைச்செடி விதைகளின் முளைப்புத்திறனும் குறைக்கப்படுகிறது. தொழி உழவின் மூலம் நெற்பயிருக்கேற்ற மண்ணின் பௌதீக, ரசாயன மற்றும் நுண்ணுரிய தன்மைகள் உருவாக்கப்படுகிறது. அதனால் நெற்பயிரின் வளர்ச்சி அதிகரிக்கப்பட்டு உயர் விளைச்சலுக்கு வழிகோலுகிறது. தொழி உழவு செய்த நிலத்தில் கீழ்நோக்கி விரயமாகும் நீர் தடுக்கப்பட்டு அளிக்கப்பட்ட ஊட்டச்சத்துக்களின் கரையும் திறன் அதிகமாகி நெற்பயிருக்கு விரைவில் கிடைக்கிறது.

இத்தகவலை கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மண் மற்றும் பயிர்கள் துறையைச் சேர்ந்த சுப்ரமண்யன், மாலதி, சுந்தர், ராஜபாண்டியன் ஆகியோரது செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலைத்துறை பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 28,2010,02:27 IST

உடன்குடி: உடன்குடியில் தோட்டக்கலைத்துறை பயிற்சி நடந்தது.உடன்குடி வட்டாரத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் கிராம பஞ்., தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளுக்கான தொழில் நுட்ப பயிற்சி உடன்குடி பஞ்., யூனியன் சேர்மன் ராஜரெத்தினம் தலைமையில் பஞ்., யூனியன் கூட்ட அரங்கில் நடந்தது. உடன்குடி டவுன் பஞ்., தலைவர் சாகுல்ஹமீது, உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் குருமூர்த்தி, வேளாண்மை உதவி இயக்குநர் பாரதி வேளாண்மை ஆய்வாளர் சுஜாதா, உடன்குடி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் சுதர்சன் உட்பட பலர் பேசினர். உதவி வேளாண்மை அலுவலர் கண்ணன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் சிவமூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர்கள் அரிகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

**நாட்டுக்கோழிக்கு ஆர்டர் குவிந்தது : பண்ணையாளர்கள் உற்சாகம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,21:10 IST

பல்லடம் :கேரளா, கர்நாடகத்தில் இருந்து 75 ஆயிரம் நாட்டுக்கோழிக்கு ஆர்டர் கிடைத் துள்ளதால், பல்லடம் பகுதி பண்ணை யாளர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.பல்லடம் பகுதியில் இருந்து வாரத்துக்கு 30 லட்சம் கறிக்கோழிகள், தமிழகத்தின் பல் வேறு மாவட்டங்கள் மற்றும் கேரள, கர் நாடகா மாநிலங்களுக்கு அனுப்பப்படு கின்றன. கறிக்கோழிக்காக வளர்க்க விடப் படும் குஞ்சுகள், 49 நாளில் இரண்டு கிலோ எடை கொண்ட கறிக்கோழியாக வளருகின்றன.நாட்டுக்கோழி குஞ்சுகள் இரண்டு கிலோ எடை வருவதற்கு 150 நாட்கள் ஆகின்றன. நாட்டுக்கோழி விலை அதிகம் என்பதால் வெளிமாநிலங்களில் சந்தைப்படுத்துதலில் இடர்பாடுகள் ஏற்பட்டன. இதன் காரண மாக, பெரும்பாலானோர் நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபட ஆர்வம் காட்டுவதில்லை. இருப்பினும், நாட்டுக்கோழி வளர்ப்பில் பல்லடம் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டுக்கோழி குஞ்சு ஒன்று 30 ரூபாய்க்கு, ஈரோடு, நாமக்கல் பகுதிகளில் இருந்து கொள்முதல் செய்து பல்லடம் பகுதி பண்ணையாளர்கள் வளர்க்கின்றனர். நாட்டுக்கோழி 90 நாளில் ஒரு கிலோ 250 கிராம் எடை கொண்ட கோழியாக வளர் கின்றன. தற்போது ஒரு கிலோ ரூ.120 முதல் 130 வரை கொள்முதல் செய்யப்படு கிறது. இதுவரை பல்லடம் பகுதியில் உள்ள பண்ணையில் உள்ளூர் பகுதியைச் சேர்ந்த கோழிக்கடை உரிமையாளர்கள் மற்றும் திருப்பூர், கோவை பகுதியைச் சேர்ந்த கோழிக்கடை உரிமையாளர்கள், வியாபாரிகளே கொள்முதல் செய்தனர்.சில மாதங்களாக, கேரளா மற்றும் கர்நாடகத்தில் இருந்தும் மாதம் 40 ஆயிரம் கோழிகள் வரை கேட்டு ஆர்டர் வந்தன. இம்மாதம் எதிர்பாராதவிதமாக 75 ஆயிரம் கோழிகளுக்கு ஆர்டர் கிடைத்துள்ளதால், பண்ணையாளர்கள் உற்சாகம் அடைந்துள் ளனர். இதேநேரத்தில், சிக்கன் ஸ்டால்களில் நாட்டுக்கோழி இறைச்சி கிலோ ரூ.190 முதல் ரூ.200 வரை விற்கப்படுகிறது.

**அதிக பனிப்பொழிவால் பட்டுப்புழுக்களுக்கு நோய் தாக்கும் வாய்ப்பு: அதிகாரிகள் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,21:16 IST

உடுமலை : உடுமலை பகுதியில் தற்போது நிலவி வரும் அதிக பனிப்பொழிவு காரணமாக பட்டுப்புழுக்களுக்கு சுண்ணாம்பு கட்டி நோய் தாக்குதல் பரவும் வாய்ப்புள்ளது என மத்திய பட்டு

வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஆண்டு முழுவதும் வெண்பட்டுக்கூடுகள் வளர்ப்பு தொழில் மேற்கொள்ளப்படுகிறது. புழு வளர்ப்பு மனைகளில் சீதோஷ்ண நிலையை முறையாக பராமரிப்பதன் மூலம் அனைத்து பருவநிலைகளிலும் இந்த ரகம் உடுமலை பகுதியில் உற்பத்தி செய்யப்படுகிறது.

மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை:சுண்ணாம்பு கட்டி நோய் பட்டுப்புழுக்களை மழை மற்றும் குளிர்காலங்களில் தாக்குகிறது. இந்தாண்டு பெய்த மழை காரணமாக அதிகரித்துள்ள ஈரப்பதத்தால் இந்நோய் பரவும் வாய்ப்புள்ளது. புழு மற்றும் கூட்டுப்புழு பருவத்தில், சுற்றுப்புறத்தில் 24 முதல் 26 சென்டிகிரேட் வெப்பம் நிலவும் போது நோய்தாக்குதல் வாய்ப்புள்ளது. உடுமலை பகுதியில் தற்போது 17 முதல் 18 சென்டிகிரேட் வெப்பம் நிலவுகிறது.நோய்தாக்கும் புழுக்கள் மந்தமாகி பின் இறந்து விடும். சில நேரங்களில் புழுக்கள் நிறம் மாறும். இறந்த புழுக்கள் கெட்டியாக வெண்மை நிறத்தில் காணப்படும். காற்றின் மூலம் வேகமாக பரவும் தொற்று நோயாக இருப்பதால், அனைத்து விவசாயிகளும் ஒருங்கிணைந்து நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

பரவலை தடுக்க நோய்தாக்கிய புழுக்கள் சாக்பீஸ் போல் கடினமாக மாறுவதற்குள்,பொறுக்கி எடுத்து, விஜேதாசப்ளிமெண்ட்' என்ற மருந்தை அவற்றின் மேல் தூவி எரிக்க வேண்டும். புழு வளர்ப்பு மனை மற்றும் தளவாடங்களுக்கு மருந்தடிக்க வேண்டும்.பரிந்துரைக்கப்பட்ட பட்டுப்புழு படுக்கை மருந்தை தூவ வேண்டும். மனையின் வெப்பம் 22 சென்டிகிரேடுக்கு குறைந்தால் அறை வெப்பமானியை பயன்படுத்தி வெப்பத்தை அதிகரிக்க வேண்டும்.மனையில், ஈரப்பதத்தை பராமரிக்க, மல்பெரி இலைகளை அளித்தபின், மீதமாகும் இலை மற்றும் கழிவுகளை அகற்றலாம். புழுப்படுக்கை அதிக தடிமனாக இல்லாமல், மனையில் நல்ல காற்றோட்ட வசதி இருக்க வேண்டும்.படுக்கையின் ஈரப்பதத்தை குறைக்க புழுக்கள் தோலுரிக்க செல்லும் போது நீர்த்த சுண்ணாம்பு தூளை தூவவும். ஒவ்வொரு தோலுரிப்பிற்கு பிறகும், பரிந்துரையின்படி விஜேதாசப்ளிமெண்ட் மருந்தை புழுப்படுக்கையில் தூவலாம்.நோய் தடுப்பு பணிகளை முறையாக மேற்கொண்டால் அனைத்து சீசனிலும் தரமான கூடுகளை உற்பத்தி செய்ய முடியும்.இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சுகாதாரமற்ற முறையில் இறைச்சி விற்பனைஆடுவதைக்கூடம் செயல்பாட்டுக்கு வருமா?**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,21:14 IST

வெள்ளகோவில் : கட்டுமான பணி முடிந்து பல நாட்களாகியும், இன்னும் ஆடுவதைக்கூடம் பயன்பாட்டுக்கு வராமல் உள்ளதால், வெள்ளகோவிலில் சுகாதாரமற்ற முறையில் ஆடு, மாடுகள் வெட்டப்படு கின்றன. கழிவுகளை அப்படியே போட்டுச் செல்வதால், துர்நாற்றம் வீசுவதோடு, சுகாதாரகேடும் ஏற் படுகிறது; மழைகாலங்களில் கொசு உற்பத்தியாகி, அப்பகுதிகளில் குடியிருப்போரை வதைக்கிறது.வெள்ளகோவிலில் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாரச்சந்தை கூடுகிறது. காய்கறி, மளிகை பொருட்கள் மட்டுமின்றி, துணி ரகங்களும் விற்கப்படு கின்றன. புது பஸ் ஸ்டாண்ட் அருகே செயல்படும் இச்சந்தை பகுதியில், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 20க்கும் மேற்பட்ட இறைச்சி கடைகள் நடத்தப்படுகின்றன.ஆடுகளை பரிசோதித்து, சுகா தாரமான முறையில் விற்கவேண்டும் என்பது விதிமுறை. ஆனால், திறந்தவெளியிலேயே ஆடு, மாடு கள் வெட்டப்படுகின்றன; சுகா தாரத்தை கடைபிடிக்காமல், அப் படியே தொங்கவிட்டு, விற்பனை செய்கின்றனர். சிலர், நோய் தாக்கிய ஆடு, மாடுகளை குறைந்த விலைக்கு வாங்கி வந்து, இறைச்சியாக்கி கொள்ளை லாபம் பார்க்கின்றனர். இதுபோன்ற இறைச்சியை உண்ணும்போது, உடல் உபாதை கள் ஏற்பட வாய்ப்புள்ளது.விற்பனை முடிந்தபின், கழிவுப் பொருட்களை முறையாக அகற்றா மல், அப்படியே விட்டுவிடுவ தால், சந்தைபகுதியில் சுகாதாரம் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

எலும்புத்துண்டு, குடற்பகுதி கள் அப்படியே போடப்படுவதால், இவற்றை உண்பதற்காக நாய்கள் பெருமளவு கூடுகின்றன. போட்டி போட்டுக்கொண்டு எலும்புத் துண்டுகளை தூக்கிச்செல்லும் நாய்களால், சுற்றுப்பகுதிகளிலும் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. மழைகாலங்களில், கழிவுகளுடன் மழைநீர் சேர்ந்து கொசுக்களின் கேந்திரமாக மாறி விடுகிறது.சுகாதாரமான முறையில் ஆடுகள் வெட்டி விற்பனை செய்வதற்காக, வெள்ளகோவில் புது பஸ் ஸ்டாண்ட் அருகில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் ஆடுவதைக் கூடம் கட்டப்பட்டுள்ளது. ஆடு பரிசோதித்தல், மருத்துவர் அறை, ஆடுவெட்டும் அறை, கழிவுகள் சேகரிப்பு அறை வசதிகளுடன் கட் டப்பட்டுள்ள இக்கட்டடம், இன் னும் பயன்பாட்டுக்கு வராமல் உள்ளது.

இதனால், திறந்தவெளியில் சுகாதாரமற்ற முறையிலேயே ஆடு, மாடுகளை வெட்டி விற்பனை செய்கின்றனர். நகர் பகுதி சுகாதாரம் மற்றும் மக்கள் நலனை கருத்தில் கொண்டு, ஆடுவதைக்கூடத்தை பயன் பாட்டுக்கு கொண்டுவர, நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க

வேண்டும். திறந்தவெளியில் சுகாதாரமற்ற முறையில் இறைச்சி விற்பனை செய்வதை தடுக்க வேண்டும்.

**வெள்ளத்தால் பாதிப்பு ரூ.4.5 கோடி நிவாரணம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,23:40 IST

சிதம்பரம் : காட்டுமன்னார்கோவில் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் 4.5 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கும் பணி துவங்கியது.மழை, வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட காட்டுமன்னார்கோவில், குமராட்சி பகுதியில் ஏற்கனவே 22 கிராமங்களில் பாதிப்புகள் கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டு 4.5 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்படுகிறது.நேற்று முதல் நிவாரணம் வழங்கும் பணி துவங்கியது. தாசில்தார் மேற்பார்வையில் இப்பணி நடந்து வருகிறது.

**கால்நடைகளுக்கு நிவாரணம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 27,2010,23:43 IST

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவிலில் வெள்ளத்தால் இறந்த கால்நடைகளுக்கு டி.ஆர்.ஓ., நடராஜன் நிவாரணம் வழங்கினார்.காட்டுமன்னார்கோவில் தாசில்தார் அலுவலகத்தில் மழை, வெள்ளத்தில் 44 ஆடுகள், 14 மாடுகள் மற்றும் 23 கன்றுகுட்டிகள் இறந்தன. அதையொட்டி கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு நிவாரண உதவி தொகை வழங்க அரசு உத்தரவிட்டது.இதற்கான நிகழ்ச்சியில் ஆர்.டி.ஓ., ராமராஜூ தலைமை தாங்கினார். சமூக நல தாசில்தார் ராமச்சந்திரன், துணை தாசில்தார் அன்பழகன், மண்டல துணை தாசில்தார் தனசங்கு முன்னிலை வகித்தனர். இறந்த ஆடுகளுக்கு தலா 1000 ரூபாயும், மாடுகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாயும், கன்றுகுட்டிகளுக்கு தலா 5,000 ரூபாயும் கால்நடை உரிமையாளர்களுக்கு டி.ஆர்.ஓ., நடராஜன் காசோலையாக வழங்கினார்.ஆர்.ஐ.,கள் தமிழ்மணி, இளங்கோ, சோமசுந்தரம் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *700 இளம் விஞ்ஞானிகள் பங்கேற்பு: சென்னையில் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு கருணாநிதி தொடங்கி வைத்தார்*



சென்னை வேல்ஸ் பல்கலைக்கழக வளாகத்தில் 18–வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டை நேற்று காலை தொடங்கி வைத்த முதல்–அமைச்சர் கருணாநிதிக்கு பள்ளிக் குழந்தைகள், பூமி உருண்டையை (குளோப்) நினைவுப்பரிசாக வழங்கிய போது எடுத்த படம். அமைச்சர் க.பொன்முடி, வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ் ஆகியோர் உடன் இருக்கிறார்கள்.



தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் கலந்து கொண்டவர்களை ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.

*சென்னை, டிச.28–*

*சென்னையில் தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டை முதல்–அமைச்சர் கருணாநிதி நேற்று தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டில் நாடு முழுவதும் இருந்து 700 இளம் விஞ்ஞானிகள் பங்கேற்கிறார்கள்.*

*குழந்தைகள் அறிவியல் மாநாடு*

*18–வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாடு சென்னையை அடுத்த பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் நேற்று தொடங்கியது. தமிழ்நாடு அறிவியல் மன்றம், தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப கவுன்சில், வேல்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த 5 நாள் மாநாட்டை முதல்–அமைச்சர் கருணாநிதி தொடங்கி வைத்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*இந்த அறிவியல் மாநாடு 12 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் நடக்கிறது. குழந்தைகள்*

அறிவியல் மாநாடு சோதனை முயற்சியாக முதலில் மத்திய பிரதேச மாநிலம், குவாலியர் நகரில் 1990–களில் நடத்தப்பட்டது. நமது அன்றாட வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து அறிவியல் மாதிரி திட்டங்களை குழந்தைகள் உருவாக்கினார்கள். கடந்த 1993–ம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் குழந்தைகள் அறிவியல் மாநாடு தேசிய அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

படைப்பாற்றல்

10 முதல் 17 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அறிவியலை பயன்படுத்தி தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும், சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும் ஒரு தளத்தை ஏற்படுத்தி கொடுப்பதுதான் அறிவியல் மாநாட்டின் தலையாய நோக்கம் ஆகும். இந்த மாநாடு, பள்ளி மாணவர்களிடையே அறிவியல் சிந்தனையை தூண்டுகிறது. 'வளமைக்கு நில ஆதாரங்களின் பயன்பாடு' என்ற கருத்தை மையப்படுத்தி இந்த மாநாடு நடைபெறுகிறது. உற்பத்தியின் முக்கிய ஆதாரம் நிலம் ஆகும். இது இயற்கையின் கொடை. நிலமும், நீரும் இயற்கை வளங்கள் ஆகும். அவை மனித வாழ்க்கைக்கு மிக முக்கியமானது.

சுற்றுச்சூழல் மாசுபடு அடைந்து வருவதால் நில வளத்திற்கு ஆபத்து ஏற்பட்டு உள்ளது. மண் அரிப்பு காரணமாக நிலத்தின் வளம் குறைகிறது. காடுகள் அழிப்பு, நிலத்தில் இருந்து அளவுக்கு அதிகமாக மண் எடுத்தல் போன்றவை இதற்கு முக்கிய காரணங்கள். மண்ணின் வளத்தை மேம்படுத்தும் வகையில் சமீப காலமாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலவளம் பாதுகாப்பு

இன்றைய விஞ்ஞான தொழில்நுட்பத்தின் காரணமாக விவசாய உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்பது உண்மைதான். ஆனால், அதேநேரத்தில், அளவுக்கு அதிகமாக ரசாயன உரங்களையும் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பயன்படுத்துவதால் மண்ணின் வளம் பாதிப்புக்கு உள்ளாகிறது. காற்று மாசுபாடு காரணமாகவும் நிலவளம் பாதிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் மாறுபாடு, பசுமைகுடில் விளைவு,, அதிகரித்து வரும் பூமி வெப்பம் ஆகியவை விவசாய நடைமுறைகளையும், நிலங்களின் பயன்பாடுகளையும் பாதித்துள்ளன. அதிகரித்து வரும் நகரமயமாக்கலால் நிலத்தின் பரப்பு குறைந்துகொண்டே வருகிறது.

இருந்த போதிலும் விஞ்ஞானம் சும்மா இருந்துவிடவில்லை. தமிழக அரசும், மத்திய அரசும், நிலவளத்தை மேம்படுத்தவும், வரும் தலைமுறையினருக்கு பாதுகாப்பான நிலத்தை விட்டுச்செல்லவும் பல்வேறு திட்டங்களை கொண்டுவந்துள்ளன. விவசாய நிலங்கள் மற்றும் நீர் ஆதாரங்களை பாதுகாக்க தமிழக அரசு பல்வேறு

நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழகத்தின் மொத்த பரப்பளவு 1.30 கோடி ஹெக்டர் ஆகும். இதில் விவசாய நிலத்தின் பரப்பு 57.7 சதவீதம். இதில் 2.80 சதவீத நிலம் விவசாயம் செய்யப்படாமல் தரிசு நிலமாக கிடக்கிறது.

காடு வளர்ப்பு திட்டம்

ஜப்பான் நாட்டு உதவியுடன் ரூ.686 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் காடுவளர்ப்பு திட்டம் முக்கியமான மண்வள பாதுகாப்பு திட்டம் ஆகும். பழங்குடிகள் வாழும் பகுதி மற்றும் மலைவாழிடங்கள் மேம்பாட்டு திட்டம், மேற்குதொடர்ச்சிமலை மேம்பாட்டு திட்டம், நீர்பிடிப்பு பகுதி மேம்பாட்டு முகமை, நீர்பிடிப்பு பகுதிகளில் மண் மற்றும் நீர் பாதுகாப்பு திட்டம், தேசிய நீர்பிடிப்பு மேம்பாட்டு திட்டம் உள்பட பல்வேறு திட்டங்களை தமிழக அரசு அறிமுகப்படுத்தி இருக்கிறது.

குழந்தைகளுக்காக நடத்தப்படும் இந்த அறிவியல் மாநாட்டில் கலந்துகொள்வதை எண்ணி பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். குழந்தைகள் மனதில் அறிவியல் சிந்தனை விதைக்கப்பட வேண்டும். அவர்களை பகுத்தறிந்து செயல்பட வைக்க வேண்டும். குழந்தைகள் நாட்டின் எதிர்காலமாகவும், எதிர்கால விஞ்ஞானிகளாகவும், வருங்கால இந்தியாவின் சிற்பிகளாகவும் திகழ்கிறார்கள்.

அறிவியல் சிந்தனை

அந்த வகையில் இன்றைய அறிவுசார் பொருளாதார சூழலில், குழந்தைகளிடையே அறிவியல் சிந்தனை விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். குழந்தைகள் மனதில் அறிவியல் சிந்தனைகளை வளர்க்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த தேசிய அறிவியல் மாநாட்டை தமிழகத்தில் நடத்துவதற்காக மாநாட்டு அமைப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்–அமைச்சர் கருணாநிதி கூறினார்.

மாநாட்டிற்கு வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கே.கணேஷ் தலைமை தாங்கினார். உயர்கல்வி அமைச்சர் கே.பொன்முடி, பள்ளிக்கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தேசிய அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் தகவல்தொடர்பு கவுன்சில் (என்.சி.எஸ்.டி.சி.) தலைவர் கமல்காந்த் திவேதி, என்.சி.எஸ்.டி.சி. நெட்வொர்க் தலைவர் ஆர்.என்.ரே ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

அமைச்சர்கள் பங்கேற்பு

தன்னை வாழ்த்தி கவிதை மழை பொழிந்த மாணவன் பரத்துக்கு முதல்–அமைச்சர் கருணாநிதி ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கினார். முன்னதாக, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப கவுன்சில் உறுப்பினர் செயலாளர் எஸ்.வின்செண்ட் வரவேற்றார்.

விழாவில், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் கே.கணேசன், பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் தேவ ஜோதி ஜெகராஜன், ‘சந்திராயன்’ திட்ட இயக்குனர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை, தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் கிருஷ்ணசாமி, வேல்ஸ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ராமச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இறுதியில், மாநாட்டு அமைப்புச் செயலாளர் சி.ராமலிங்கம் நன்றி கூறினார்.

5 நாட்கள் நடக்கிறது

இந்த மாநாட்டில், தமிழ்நாடு உள்பட இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த 700 இளம் விஞ்ஞானிகள் கலந்து கொள்கிறார்கள். 5 நாட்கள் நடைபெறும் இந்த மாநாடு 31–ந் தேதியுடன் முடிவடைகிறது. நிறைவுவிழா நிகழ்ச்சியில், நோபல் பரிசுபெற்ற இந்திய விஞ்ஞானி வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் கலந்து கொள்கிறார்.

## உற்பத்தி குறையும் என்ற மதிப்பீட்டால் மிளகு ஏற்றுமதி சரிவடைய வாய்ப்பு



எஸ் சனந்தகுமார்

கொச்சி

நடப்பு ஆண்டில், நாட்டின் மிளகு உற்பத்தி எதிர்பார்த்த அளவிற்கு இருக்காது என ஒரு சில வர்த்தக நிபுணர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். இதனால், ஏற்றுமதி குறைய வாய்ப்புள்ளது என சந்தை வட்டாரத்தினர் தெரிவித்தனர்.

மறு மதிப்பீடு

அதிக மழை பொழிவால், கேரளாவின் வட பகுதிகளில் மிளகு உற்பத்தி குறைந்துள்ளது. நடப்பு ஆண்டில் 48,000 டன் மிளகு உற்பத்தியாகும் என முதலில் மதிப்பீடு

செய்யப்பட்டிருந்தது. ஆனால், மறு மதிப்பீட்டில், உற்பத்தி 45,000 டன் அளவிற்கே இருக்கும் என தெரிகிறது. இதனால், ஏற்றுமதிக்கான கையிருப்பு குறைந்துபோக வாய்ப்புள்ளது. டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில், நடப்பு சந்தையில், ஒரு கிலோ மிளகின் விலை ரூ.215 என்ற அளவில் இருந்தது. முன்பேர வர்த்தக சந்தையில், ஜனவரி மாத விநியோகத்திற்கான விலை ரூ.216 என்ற அளவில் உள்ளது.

உள்நாட்டில், மிளகிற்கான தேவைப்பாடு 40,000–45,000 டன் என்ற அளவில் உள்ளது. மறு மதிப்பீட்டின்படியான உற்பத்தி, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கே இருக்கும். கடந்த ஒரு சில ஆண்டுகளாக, உள்நாட்டில் மிளகு பயன்பாடு அதிக ஏற்ற, இறக்கம் இல்லாமல் நிலையாக உள்ளது.

உள்நாட்டில், கேரளாவின் வடக்கு பகுதி மற்றும் கர்நாடகா ஆகிய இடங்களில்தான் மிளகு மிக அதிக அளவில் உற்பத்தியாகிறது. அதிக மழை பொழிவால், மிளகு அறுவடையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மிளகு அளிப்பு குறையும் நிலையில், இதன் விலை உயர வாய்ப்புள்ளது என சந்தை வட்டாரத்தினர் தெரிவித்தனர்.

ஏற்றுமதி

உலக அளவில், மிளகு உற்பத்தியில் வியட்நாம், இந்தோனேஷியா, பிரேசில் ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன. இந்த நிலையில், வியட்நாமில் மிளகு கையிருப்பு குறைவாகவே உள்ளது. இதனால், பல பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவிலிருந்து மிளகை பெற ஆர்வம் காட்டி வருகின்றன. இருப்பினும், கிறிஸ்துமஸ் உள்ளிட்ட பண்டிகை விடுமுறைகளால் பல ஐரோப்பிய நாடுகளில் மிளகு இறக்குமதி இன்னும் சூடுபிடிக்கவில்லை.

இந்தோனேஷியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில், நடப்பு ஆண்டில், மிளகு உற்பத்தி குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், உலக சந்தைகளுக்கு மிளகு வரத்து குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல நாடுகள், இந்தியாவிலிருந்து மிளகை இறக்குமதி செய்து கொள்ள விரும்புகின்றன. ஏனெனில், ஒரு டன் இந்திய மிளகின் விலை 5,000 டாலர் என்ற அளவில் உள்ளது. இது, குறைவான விலையாக கருதப்படுகிறது.

கேரளா

கேரளாவுடன் ஒப்பிடும்போது கர்நாடக மாநிலத்தில் மிளகு உற்பத்தியில் பாதிப்பு இல்லை என்ற நிலைப்பாடும் உள்ளது. அடுத்த ஒரு சில வாரங்களில்தான் மிளகு உற்பத்தி குறித்து தெளிவான நிலை தெரியவரும். அதன் பிறகே ஏற்றுமதிக்கு எந்த அளவிற்கு மிளகு கிடைக்கும் என்பது தெரியவரும் என இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கூறினர்.

**அனைத்து காய்கறிகளின் விலையும் ராக்கெட் வேகத்தில் உயர்வு எந்த ஆண்டும் இல்லாத வகையில் ஒரு கிலோ தக்காளி ரூ.55 2 நாட்களாக குறைந்த வெங்காய விலை மீண்டும் மிரட்டுகிறது**



சென்னை, டிச.28–
தமிழ்நாட்டில் அனைத்து காய்கறிகளின் விலையும் ராக்கெட் வேகத்தில் உயர்ந்துள்ளது. ஒரு கிலோ தக்காளி எந்த ஆண்டும் இல்லாதவகையில் கிலோ ரூ.55–க்கு விற்கப்படுகிறது.

விலைவாசி உயர்வு

இந்தியா முழுவதும் விலைவாசி உயர்வு பொதுமக்களை ஆட்டிப்படைத்துவருகிறது. நாளுக்கு நாள் உயர்ந்துவரும் விலைவாசி உயர்வால் பாமரமக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கிறார்கள். 500 ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு மளிகைக்கடைக்கு சென்றால் இரண்டு அல்லது 3 பொருட்கள் மட்டுமே வாங்கமுடிகிறது. 500 ரூபாய் நோட்டுக்கு மதிப்பே இல்லாத வகையில் விலைவாசி உயர்வு இருக்கிறது என்று நடுத்தர மக்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

ஒரு கிலோ பொன்னி அரிசி ரூ.40 வரை விற்பனையாவதால், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் என்ன செய்வது, யாரிடம் சொல்வது என்று தெரியாமல் திக்குமுக்காடுகிறார்கள். மத்திய–மாநில அரசுகளால் எந்த பொருட்களின் விலை உயர்வையும் கட்டுப்படுத்த முடியவில்லை. சாதாரணமாக ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனையான மலைப்பூண்டு, படிப்படியாக உயர்ந்து இன்று கிலோ

ரூ.300–ஐ தாண்டிவிட்டது.

மஞ்சள் விலையை கேட்டால் மயக்கம் வந்துவிடும் அளவுக்கு ஒரு கிலோ ரூ.220 ஆக உயர்ந்துள்ளது. ஒரு லிட்டர் பாமாயில் பாக்கெட் ரூ.56, துவரம்பருப்பு கிலோ ரூ.65, சர்க்கரை கிலோ 33, மிளகு கிலோ ரூ.280 ஆகும். இப்படி இன்று ஒருவிலை நாளை ஒருவிலை என்று தினமும் உயரும் விலைவாசி உயர்வால் இல்லத்தரசிகள் தங்கள் வீடுகளில் எப்படி குழம்புவைத்து சாப்பிடுவது என்று புலம்புகிறார்கள்.

கண்ணீர் வருகிறது

இந்தநிலையில், காய்கறி விற்கும் விலையை பார்க்கும் போது, சிக்கன் விலையே பரவாயில்லை என்று சொல்லும் அளவுக்கு வந்துவிட்டார்கள். அந்த அளவுக்கு அனைத்து காய்கறிகளின் விலையும் ராக்கெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. ஒரு கிலோ வெங்காயம் ரூ.100 முதல் ரூ.120 வரை விற்பனையானதால் சாதாரண மக்களை சுனாமி போல ஒருபுரட்டு புரட்டிவிட்டது. கடந்த 2 நாட்களாக குறைந்துவந்த வெங்காயம் விலை மீண்டும் உயர்ந்து மக்களை மிரட்ட தொடங்கிவிட்டது. வெங்காயத்தை உரித்தால் கண்களில் கண்ணீரை வரவழைக் கும். ஆனால் வெங்காயம் விலையை கேட்டாலே கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது.

வெங்காய் விலையை குறைக்க மத்திய அரசு இறக்குமதி வரியை ரத்துசெய்தும் எந்த பயனும் இல்லை. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு நேற்று மிகவும் குறைந்த அளவில் 35 லாரிகளில் மட்டுமே வெங்காயம் இறக்குமதியானது என்று வியாபாரி பாஸ்கரன் தெரிவித்தார். குறைந்த அளவே வரத்து உள்ளதால் வெங்காயம் விலை மீண்டும் சூடுபிடித்துள்ளது. மகாராஷ்டிரா வெங்காயம் ஒரு கிலோ ரூ.55–க்கு விற்பனையானது, ரூ.60 ஆகவும், கர்நாடக வெங்காயம் ஒரு கிலோ ரூ.50–க்கு விற்பனையானது, ரூ.55 ஆகவும், ஆந்திரா வெங்காயம் கிலோ ரூ.40–க்கு விற்பனையானது, ரூ.45 ஆகவும் அதிகரித்துள்ளது.



*தக்காளி கிலோ 55 ரூபாய்*

*தமிழ்நாட்டில் தக்காளிக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழக வியாபாரிகள் கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கு சென்று போட்டி போட்டுக்கொண்டு தக்காளியை வாங்கிவருகிறார்கள். சென்னை நகர மக்களுக்கு ஒரு நாளைக்கு 60 லாரி தக்காளி தேவை. மழையால் தக்காளி செடிகள் அழிந்துவிட்டதால் ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து நேற்று 30 லாரிகளில் மட்டுமே தக்காளி வரத்து இருந்தது. இதனால் ஒருகிலோ நவீன், மற்றும்நாட்டுதக்காளி கிலோ அதிக பட்சமாக ரூ.55 வரை விற்பனையானது.*

*இந்த விலை உயர்வு எந்த ஆண்டும் இல்லாதது என்றும், இன்னும் ஒரு மாதத்திற்கு தக்காளி விலை குறைய வாய்ப்பு இல்லை என்றும் கோயம்பேடு தக்காளி வியாபாரிகள் சங்க தலைவர் தியாகராஜன் தெரிவித்தார்.*

*ஒரு முருங்கைக்காய் ரூ.10*

*முருங்கைக்காய் விற்கும் விலையில் சாம்பாரில் முருங்கைக்காய் போடவே முடியவில்லை என்று பெண்கள் குமுறுகிறார்கள். அதிக பட்சமாக ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.100 வரை விற்பனையாகிறது. சில்லரை கடைகளில் ஒரு முருங்கைக்காய்க்கு ரூ.10 கொடுத்தால் கூட கிடைப்பது அரிதாக உள்ளது. தமிழ்நாட்டில் முருங்கைக்காய் விளைச்சல் இல்லாததால் குஜராத்தில் இருந்தே தமிழ்நாட்டுக்கு முருங்கைக்காய் வரத்து உள்ளது.*

*சில்லரை கடைகளில் அவரைக்காய் கிலோ ரூ.55–க்கும், வெண்டைக்காய் கிலோ ரூ.48–க்கும், பாகற்காய் கிலோ ரூ.30–க்கும், பீன்ஸ் கிலோ ரூ.40–க்கும், கத்தரிக்காய் கிலோ ரூ.32–க்கும், புடலங்காய் கிலோ ரூ.30–க்கும் விற்பனையானது.*

*கோயம்பேடு மொத்த மார்க்கெட்டில் உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, சேம்பு ஆகியவற்றின் விலைமட்டும் உயரவில்லை. காய்கறி விலை உயர்வால் காய்கறி விலை உயர்வால் சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டில் 25 சதவீதம் விற்பனை குறைந்துள்ளது என்று வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.*

*ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தொடர்ந்து பெய்த மழையால் காய்கறி செடிகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதே விலை உயர்வுக்கு காரணம் என்று கோயம்பேடு காய்கறி மார்க்கெட் ஆலோசகர் சவுந்தரராஜன் தெரிவித்தார். கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வழக்கமாக தினமும் 450 லாரிகளில் காய்கறிகள் வந்துகொண்டிருந்த நிலை மாறி தற்போது 150 முதல் 200 லாரிகளில் மட்டுமே காய்கறிகள் வரத்து உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.*

## *சூளகிரி பகுதியில் 60 காட்டு யானைகள் மொத்தமாக படையெடுப்பு தொடர்ந்து நாசமாகும் பயிர்கள்–பொதுமக்கள் அதிர்ச்சி*

*சூளகிரி, டிச.28–*

*சூளகிரியை சுற்றி உள்ள பகுதியில் 60 காட்டு யானைகள் மொத்தமாக படையெடுத்து வந்து பயிர்களை சேதப்படுத்தி உள்ளன. இதனால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.*

*யானைகளின் படையெடுப்பு*

*கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காட்டு யானைகள் வனப்பகுதியையொட்டி உள்ள கிராமங்களுக்குள் நுழைந்து பயிர்களை நாசம் செய்து வருகின்றன. இவைகள் கும்பல் கும்பலாக பிரிந்து சூளகிரியையொட்டியுள்ள கோபசந்திரம், போடூர், பன்னப்பள்ளி மற்றும் சானமாவு போன்ற பகுதிகளில் பயிர்களை அழித்து நாசம் செய்து வந்தன. ஆனால், தற்போது சுமார் 60 யானைகள் ஒன்றாக சேர்ந்து போடூர் பகுதியில் முகாமிட்டுள்ளன. நேற்று முன்தினம் நள்ளிரவில் கிராமப்பகுதிக்குள் புகுந்த யானைக்கூட்டம் தோட்டங்களுக்குள் நுழைந்து சூறையாடின.*

*தென்னை மரங்கள் சாய்ப்பு*

*போடூர் கோபாலப்பா என்பவருக்கு சொந்தமான 12 தென்னை மரங்களையும், பசப்பா என்பவரின் 5 தென்னை மரங்களையும் முட்டி சாய்த்தன. அதைத்தொடர்ந்து பல விவசாயிகளுக்கு சொந்தமான கேழ்வரகு, துவரை ஆகிய பயிர்களை துவம்சம் செய்தன. யானைக் கூட்டத்தின் படையெடுப்பால் போடூர் பகுதி மக்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர். வனத்துறையினர் யானைகளை வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். யானைகளின் அட்டகாசத்தை தடுக்கக்கோரி உத்தனப்பள்ளி அருகே நேற்று முன்தினம் 8 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் சாலை மறியல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

# காய்கறி மாலையுடன் போராட்டம்



காய்கறி விலை உயர்வை கண்டித்து, கொல்கத்தா நகரில், திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்கள் காய்கறி மாலை அணிந்து கொண்டு, போராட்டம் நடத்தினார்கள்.